www.Padasalai.Net www.TrbTnpsc.com

V11T

விருதுநகர் மாவட்டம்
இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025

வகுப்பு 11
பொதுத்தமிழ்
பகுதி -I

காலம் 3: 15 மதிப்பெண்கள்: 90

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: 14×1=14

1) " கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்"- அடி மோனையைத் தெரிவு செய்க.
அ) கபாடபுரங்களை - காவு கொண்ட. ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாலடபுரங்களை -காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

2) மண்ணுக்கு வளம் சேர்ப்பன.
அ)மண்புழு ஆ) ஊடு பயிர் இ)இயற்கை உரங்கள் ஈ) இவைமூன்றும்

3) பிழையான தொடரைக் கண்டறிக.
அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு,கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.
ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.
இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.
ஈ) யானைகளால் வெகு தொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறிய முடியும்.

4) காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ)அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

5) சரியான விடையைத் தேர்க.
அ) கல்வி அழகே அழகு - 1) தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரைப் பாடல்
ஆ) இளமையில் கல் - 2)திருமந்திரம்
இ) துணையாய் வருவது தூயநற்கல்வி - 3)ஆத்திசூடி
ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் - 4)நாலடியார்
( i) அ-2,ஆ-3,இ-4,ஈ-1 (ii) அ-3,ஆ-4,இ-1,ஈ-2 (iii) அ-4, ஆ-3, இ-2, ஈ-1 (iv)அ-4,ஆ-1,இ-2,ஈ-3

6) ஆஸ்கர் விருது யாருக்கு வழங்கப்பட்டது?
அ) ஏ. ஆர் .இரகுமான் ஆ) பாரதிராஜா இ) சித்ரா ஈ) இளையராஜா

7) தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை.
அ)9 ஆ) 12 இ)27 ஈ)18

8) மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ____________ நினை.
அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை
இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை

9) ' ழ ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மநாமால் வெளியிடப்பட்டது;
'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது.
அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதைநூல் , திருச்சாழல்
இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

10) 'ஜனப்பிரளயம் 'என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?
அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை
இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

11) யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்?- இது எவர் மொழி?
அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்

12) 'ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்'- கவிதையின் ஆசிரியர்?
அ) இன்குலாப் ஆ) அப்துல் ரகுமான் இ) பிரபஞ்சன் ஈ) பாரதியார்

13) ஆசிரியப்பாவிற்குரிய தளை________ ஆகும்.
அ) கலித்தளை ஆ) நிரையொன்றாசிரியத் தளை
இ) வஞ்சித்தளை ஈ) இயற்சீர் வெண்டளை

14) 'புராணம் 'என்பதன் பொருள் யாது?
அ) சிறுகதை ஆ) நாவல் இ) வரலாறு ஈ) நாடகம்

பகுதி -II
பிரிவு -1

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக: 3×2=6

15) காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?

16)" ஊனமில் ஊக்கமும் ஒளிர காய்த்தநல்
தீன் எனும் செல்வமே பழுத்த சேணகர் " -இப்பாடலடிகளில் ஒளிரக்காய்த்தது எது? பழுத்தது எது?

17) மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?

18) ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யாருக்குள- இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2×2=4

19) தமிழ்நாட்டின் மாநில மரம் சிறு குறிப்பு வரைக.

20) நாட்டுப்புறங்களிலும்,பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

21) இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை ?

பிரிவு -3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக: 7×2=14

22) உயிர்முதல், மெய்முதல் -எடுத்துக்காட்டுடன் விவரிக்கவும்.

23) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ் கலைச் சொற்களை எழுதுக.

அ) Agreement ஆ) Passport

24) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) தேர்வெழுத வேகமாப் போங்க நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.

ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

25)மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

வலி , வளி , வழி

26)வல்லினமெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலை நாட்ட செய்தனர்

www.Padasalai.Net

27)சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

காஃநடை ( அல்லது) பிண்ணாக்கு

28)ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சிவிதி தருக.

அ)அருவினை ஆ)காலத்தச்சன்

29)ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ)விடுத்தல் ஆ)அமர்ந்து

30) தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.

பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி.

பகுதி -III
பிரிவு -1

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக: 2×4=8

31)"சலச வாவியில் செங்கயல் பாயும்"- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32) புகழுக்குரிய பண்புகளாக நீவீர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறைவழி நின்று கூறுக.

33) சேர நாடு செல்வவளம் மிக்கது என்ற கூற்றுக்குரிய காரணங்களக் குறிப்பிடுக.

34) வாய்க்காலின் சிறப்புகளாக் குறிப்பிடப்படுவன யாவை?

பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக: 2×4=8

35) ஜீவாவின் பேச்சு நடை குறித்து சுந்தர ராமசாமி கூறுவன யாவை?

36) ஃபிரெஸ்கோ ஓவியங்கள்; கற்றளிக் கோவில்கள் குறித்து நீவீர் அறிவன யாவை?

37) 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது '-என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

பிரிவு -3

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக: 3×4=12

38) பிறிதுமொழிதல் அணி (அல்லது) வேற்றுமை அணி

39) இலக்கியநயம் பாராட்டுக: (மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக)

" தண்டலை மயில்கள் ஆட , தாமரை விளக்கம் தாங்க ,

கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளை கண் விழித்து நோக்க,

தெண் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்

வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ"

- கம்பர்

40) பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்பு படுத்தி எழுதுக.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



அ) சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்.

(அல்லது)

ஆ) பேராசை பெருநட்டம்

41) தமிழாக்கம் தருக.

1) Culture does not make people.people make culture.

2) You must be the change you wish to see in the world.

3) The pen is mighter than the sword.

4) Knowledge rules the world.

42) அடைப்புக்குள் உள்ள ஆக்கப் பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப் பெயர்களைக் கண்டறிக.

1) வேவு பார்த்திடுவான் ; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி)= ____________

2) அறிவைத் தேடிப் போகும் இடம் ;உலகம் அறிய உதவுமிடம் (அகம்)= ____________

3)வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது( மானம்)= ____________

4) வேடம் போட்டவன் வேடதாரி ;பட்டம் வாங்கினவன்?( தாரி)= ____________

43) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி -IV

அனைத்து வினாக்களுக்கும் விட அளிக்கவும்: 3×6=18

44) அ) 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

(அல்லது)

ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை ,தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க.

45)அ) "இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயந்தே இருந்தன "- இக்கூற்றினை மெய்ப்பிக்கவும்.

(அல்லது)

ஆ) சுந்தரராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை "என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

46)அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

(அல்லது)

ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

## பகுதி -IV

47) அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: 4+2=6

அ) ' சிற்றூரும்' எனத் தொடங்கும்- புரட்சிக்கவி பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) பெரிது- என முடியும் குறளை எழுதுக.

- - - - - - -

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com